திருவண்ணாமலை ஊராட்சி ஏந்தல் வருவாய் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை:- வி.ஆனந்தி, ஊராட்சி மன்ற தலைவர்(பொறுப்பு)

நாள்:-23-03-2024

பொருள்: மனைப்பிரிவு - மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை, திருவண்ணாமலை வட்டம், கீழ்நாத்தூர்கிராமம்,புதிய சர்வே எண்.35/3B8A1A-ல் ஏக்கர்-0.48-ல் அமைந்துள்ள மனைப்பிரிவுக்கு அனுமதி தொடர்பாக மனை விற்பனை செய்ய ஒப்புதல் அளித்தல் சார்பு.

பார்வை:1. மனுதார் விண்ணப்பம்.
2. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4 (3) துறை நாள்:04.06.2004
3. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4 (3) துறை நாள்:04.06.2004
4. தலைவர் ஏந்தல் ஊராட்சி, திருவண்ணாமலை அவர்களின் தீர்மான எண்.117, நாள் .23.03.2024
5. திருவண்ணாமலை மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் DTCP NO.86/2024-நகல்

****

மேற்படி பொருள் மற்றும் பார்வைக்கிணங்க திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம் கீழ்நாத்தூர் கிராமம் புதிய சர்வே எண்.35/3B8A1A-ல் ஏக்கர்-0.48-ல் அமைந்துள்ள மனைப்பிரிவுக்கு ம.வ.ந.ஊ.அ(தி.மலை) எண்:86/2024-என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஊரட்சி சாலைகள் மூலை முடுக்குகள் மற்றும் மின் மாற்றி அமைவிட்ம் பொது உபயோகம் அமைவிடம் ஆகியவைகள் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே DTCP NO.86/2024-என்ற அனுமதி எண் மூலம் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மனைப்பிரிவு வரைப்படத்தில் உள்ள மனைக்கு அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்-22.03.2024—ன் படி ஏந்தல் ஊராட்சி அமைப்பு நில பயன் மற்றும் கட்டணம் 3 விழுக்காடு தொகை ரூ.7500/- (எழுத்தால், ஏழுயிரத்து ஐந்து நூறு மட்டும்) ஆகியவைகளை ஏந்தல் பல்வகை ரசீது செலுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மனைக்கு தொழில்நூட்ப இசைவு அளிக்கப்பட்டு இறுதி ஒப்பபுதல் அளித்து பஞ்சாயத்து மூலமாக அனுமதிக்கப்படுகிறது.

V. Anandhi

தலைவர் (பொறுப்பு)
ஏந்தல் ஊராட்சி
திருவண்ணாமலை ஒன்றியம்.